# அலகு -4

## வெண்பா

**வெண்பாவின் பொது இலக்கணம்:-**

1) வெண்பாவின் ஈற்றடி முச்சீர்களையும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் இருக்கும்.
2) இயற்சீரும் வெண்சீரும் பயின்று வரும்
3) இயற்சீர் வெண்டனையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று வரும் (பிற தளைகள் வாரா)
4) ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று முடியும்.
5) செப்பலோசைப் பெற்று வரும்
6) இரண்டடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை வரும்
7) ஒரு விகற்பமாகவோ – பல விகற்பமாகவோ வரும்.

**வெண்பா ஐந்து வகைப்படும் அவை:-**

1) குறள் வெண்பா
2) சிந்தியல் வெண்பா
3) நேரிசை வெண்பா
4) இன்னிசை வெண்பா
5) ப.ஃ.றொடை வெண்பா என்பனவாகும்.

**ஆசிரியப்பா**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:-**

1) அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும்.
2) பெரும்பாலும் ஈரசைச் சீர்களாகிய மாச்சீர் - விளச்சீர் (ஆசிரியர் உரிச்சீர்கள் பெற்று வரும்)
3) வஞ்சி உரிச்சீர்கள் பெற்று வரும்
4) நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் மிகுந்து வரும் பிற தளைகளும் வரும்.
5) குறைந்தது மூன்றடிகள் கொண்டும். மிகுதியாக பாடுவோரின் எண்ணப்படி மிக்கும் வரும்.

6) அகவல் ஓசைப் பெற்று வரும். அகவல் ஓசைப் உடையதால் 'அகவற்பா' எனவும் பெயர் பெறும்.

**ஆசிரியப்பாவின் வகைகள்:-**

1) நேரிசை ஆசிரியப்பா
2) நிலைமண்டில் ஆசிரியப்பா
3) இணைக்குறள் ஆசிரியப்பா
4) அடிமறிமண்டில் ஆசிரியப்பா

## பொருள்கோள்

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்கு பொருள் கோள் என்று பெயர்

1. ஆற்றநீர்ப் பொருள்கோள்
2. மொழி மாற்றுப் பொருள்கோள்
3. நிரனிறைப் பொருள்கோள்
4. பூட்டுவிற் பொருள்கோள்
5. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
6. அடிமறிப் பொருள்கோள்
7. தாப்பிசைப் பொருள்கோள்
8. அளைமறிப் பொருள்கோள்

## அணி

அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருளாகும். புலவர்கள் தம் கற்பனைத் திறத்தாலும், புலமை நயத்தாலும் சொல்லழகும், பொருளழகும் தோன்றப் பாடிய செய்யுட்களின் அழகினை விளக்கிக் கூறுவது அணி இலக்கணம் ஆகும். அணிகள் பல வகைப்படும்.

1) உவமை அணி
2) தற்குறிப்பேற்ற அணி
3) உயர்வு நவிற்சியணி
4) இல்பொருள் உவமையணி
5) வேற்றுமையணி
6) சொற்பொருள் பின்வருநிலையணி

**1) உவமை அணி:-**

'தாமரை போன்ற முகம்'

முகத்தின் அழகை விளக்குவதற்காக முகம் தாமரை மலரோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

தாமரை – உவமை

முகம் - பொருள்

போன்ற - உவமஉருபு

இவ்வாறு ஒரு பொருளை அத்தன்மை கொண்ட மற்றோரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணி எனப்படும். உவமை, உவமிக்கப்படும் பொருள், உவம உருபு மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்கும்.

**எடுத்துக்காட்டு:-**

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

ஊருணி நிர் நிறைந்து – உவமை

பேரறிவாளன் திரு – பொருள்

அற்று - உவமஉருபு

இச்செய்யுளில் ஒப்பரவாகிய நற்பண்புடையவுனுடைய செல்வம் ஊருணி நீர் நிறைந்ததற்கு ஒப்புவமையாகக் கூறப்பட்டுள்ளது. உவமை, பொருள், உவமை உருபு இம்மூன்றும் இக்குறட்பாவில் வெளிப்படையாய் வந்துள்ளதால் இக்குறட்பா உவமையணியாகும்.

**2) தற்குறிப்பேற்றணி**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மீது கவிஞர் தன்னுடைய கற்பனையை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். (தன்+குறிப்பு+ஏற்றம் +அணி)

"பெயர்பொருள் அல்பொருள் எனஇரு பொருளினும்
இயல்வின் வினைத்திறன் அன்னி அயலொன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்"

என்று தண்டியலங்காரம் தற்குறிப்பேற்ற அணியை விளக்குகிறது.

**எடுத்துக்காட்டு:-**

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட" – (சிலப்பதிகாரம்)

விளக்கம்:- காற்றில் கொடிகள் அசைவது இயல்பாகும். ஆனால் இளங்கோவடிகள் கோவலனும் கண்ணகியும் மதுரை நகருக்குள் நுழையும் போது. "இக்கோவலன் பிறகு கொல்லப்படுவாள் எனக் கருதி மதில்மேலிருந்து கொடிகள் மறித்துக் கையசைத்து இம்மதுரைக்குள் வரவேண்டாம்" என்று கூறுவதாகக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மேல் கவிஞர் தம் கற்பனையை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

**3) உயர்வு நவிற்சியணி:-**

இயல்பான ஒன்றை மிகவும் உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

'விண்முட்டும் கோபுரம்'

மிகுந்த உயரமான கோபுரம் என்பதை வானை முட்டுகின்ற அளவிற்கு உயரமான கோபுரம் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

**எடுத்துக்காட்டு:-**

"பார்சிறுத்தலின் படை பெருந்ததோ
படை பெருத்தலின் பார் சிறுத்ததோ"

என்ற கலிங்கத்துப்பரணி பாடலில் படையின் பெருக்கத்தைக் கூறவந்த செயங்கொண்டார் பூமியை நோக்கப் படை பெரிதாகவும், படையை நோக்கும் பொழுது பார் சிறிதாகவும் உள்ளது என்று கூறுவார். இவ்வாறு இயல்பான பொருளை மிகவும் உயர்த்திக் கூறுவது உயர்வு நவற்சியணியாகும்.

**4) இல்பொருள் உவமையணி:-**

புலவர் ஒரு பொருளுக்கு உவமை கூறும்பொழுது உலகில் இல்லாத பொருளை அல்லது நடைபெறாத செயலை உவமையாகக் கூறுவது இல்பொருள் உவமையணியாகும்.

**எடுத்துக்காட்டு:-**

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

வற்றல் மரம் தளிர்ந்தது - உவமை
அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை - பொருள்
அற்று - உவம உருபு

அன்பு இல்லாதவரது வாழ்க்கை வலிய பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்ததைப் போன்றது என்று அன்பு இல்லாதவாறு வாழ்க்கைக்குப் பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்வதை உவமையாகக் கூறுகிறார். பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தல் என்பது இல்பொருளாகும். பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்க்காததைப் போல என்பது இதன் பொருளாகும். இவ்வாறு இல்லாத பொருளை உவமையாகக் கூறுவது இல்பொருள் உவமையணியாகும்.

**5) வேற்றுமையணி:-**

புலவர் ஒரு செய்யுளில் இரண்டு பொருள்களுக்குரிய ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் ஒரு காரணம் கூறி இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

"கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை அணியே"

என்று வேற்றுமை அணியின் இலக்கணத்தைத் தண்டியலங்காரம் விளக்குகிறது.

**எடுத்துக்காட்டு:-**

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

தீயினாற் சுடுவது உடலைப் புண்படுத்தும், நாவினாற் சுடுவது உள்ளத்தைப் புண்படுத்தும் என்று தீக்கும், நாவுக்கும் உள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர் தீயனாற் சுட்ட புண் ஆறிவிடும். ஆனால் நாவினாற் சுட்ட புண் ஆறாது என்று வேறுபடுத்திக் கூறுகிறார். இவ்வாறு பொருள்களுக்குமிடையே உள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர் வேற்றுமைப்படுத்திக் கூறுவது வேற்றுமையணியாகும்.

**6) சொற்பொருள் பின்வருநிலையணி:-**

செய்யுளில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருமாயின் அது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயின்
பின்வரும் என்னின் பினவரு நிலையே"

என்று இவ்வணியை தண்டியலங்காரம் விளக்குகிறது.

**எடுத்துக்காட்டு:-**

“சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை

வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து”

இக்குறட்பாவில் சொல் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து அதே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வரு நிலையணி எனப்படும்.

**வினாக்கள்:-**

1. வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக,
2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் வரையறு.
3. பொருள் கோள் என்றால் என்ன?. அதன் வகைகளைக் கூறுக
4. உவமையணி சான்றுடன் தருக.
5. தற்குறிப்பேற்ற அணி உதாரணத்துடன் விளக்குக.
6. உயர்வு நவிற்சியணி எடுத்துகாட்டுடன் கூறுக.
7. இல்பொருள் உவமையணி சான்றுடன் பொருள் தருக.
8. வேற்றுமையணி எடுத்துக்காட்டுடன் விளக்கி வரைக.
9. சொற்பொருள் பின்வருநிலையணி உதாரணத்துடன் கூறுக.

# இலக்கிய வரலாறு

## ஐம்பெருங்காப்பியங்கள்

| வ.எண் | நூற்பெயர் | நூலாசிரியர் | சமயம் | காலம் | பெரும்பிரிவு | உட்பிரிவு | பாடல் | பாட்டுடைத் தலைவன் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | சமணம் | கி.பி 2ம் நூற் | காண்டம் 3 | காதை 30 | - | கண்ணகி | முதற்காப்பியம் |
| 2 | மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் | பௌத்தம் | கி.பி 2ம் நூற் | இல்லை | காதை 30 | - | மணிமேகலை | பிற சமயங்களை எதிர்க்கும் முதல் நூல் |
| 3 | சீவகசிந்தாமணி | திருத்தக்கத் தேவர் | சமணம் | கி.பி 9ம் நூற் | இல்லை | சருக்கம் 13 | 3145 | சீவகன் | முழுவதும் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட காப்பியம் |
| 4 | வளையாபதி | தெரியவில்லை | சமணம் | - | - | - | 72 | நவகோடி நாராயணன் | முழுமையாகக் கிடைக்கவில்லை |
| 5 | குண்டலகேசி | நாதகுத்தனார் | பௌத்தம் | கி.பி 7ம் நூற் | - | - | 224 | குண்டலகேசி (பத்தரை) | முழுமையாகக் கிடைக்கவில்லை |

## ஐஞ்சிறுகாப்பியங்கள்:

| வ.எண் | நூற்பெயர் | நூலாசிரியர் | சமயம் | காலம் | பெரும்பிரிவு | உட்பிரிவு | பாடல் | பாட்டுடைத் தலைவன் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சூளாமணி | தோலாமொழித் தேவர் | சமணம் | கி.பி 10ம் நூற் | - | சருக்கம் 12 | 2330 | பயாபதி | பெருங்காப்பிய இலக்கணம் பொருந்திய நூல் |
| 2 | நீலகேசி | தெரியவில்லை | சமணம் | கி.பி 11ம் நூற் | - | சுருக்கம் 10 | 894 | நீலகேசி | குண்டலகேசிக்கு எதிர் நூல் |
| 3 | யசோதர காவியம் | வெண்ணாவலூர் உடையார்வேள் | சமணம் | கி.பி 13ம் நூற் | - | சருக்கம் 5 | 320 | உதயணன் | - |
| 4 | உதயணகுமார காவியம் | தெரியவில்லை | சமணம் | கி.பி. 15 ம் நூற் | காண்டம் 6 | - | 369 | உதயணன் | - |
| 5 | நாககுமார காவியம் | தெரியவில்லை | சமணம் | கி.பி. 16 ம் நூற் | - | சருக்கம் 5 | 170 | நாககுமாரன் | வேறுபெயர் நாகபஞ்சமி கதை முழுவதும் கிடைக்கவில்லை |

# பெரியபுராணம்

## பெரியபுராணம் (12 ஆம் திருமுறை)

- 12ஆம் திருமுறையாக உள்ள நூல் பெரியபுராணம்
- ஆசிரியர் சேக்கிழார்
- சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்
- பிறந்த ஊர் குன்றத்தூர்
- வேளாண் மரபினர்
- அநபாய சோழனிடம் அமைச்சராக இருந்தவர்
- அமைச்சராக இருந்தபோது இவருக்கு உத்தமசோழ பல்லவன் என்ற பட்டம் உண்டு
- இவர்க்குத் தொண்டர் சீர் பரவுவார் என்ற பெயரும் உண்டு
- பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்டபெயர் திருத்தொண்டர் புராணம்
- இது 'திருத்தொண்டர் மாக்கதை' என்றும் வழங்கப்படுகிறது
- சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை முதல் நூல். நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டத் திருவந்தாதி வழி நூல். சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் சார்பு நூல்.
- திருத்தொண்டத் தொகை – தொகை நூல்

திருத்தொண்டத் திருவந்தாதி – வகைநூல்

திருத்தொண்டர் புராணம் – விரிநூல்

என்றும் குறிப்பிடுவர்

- பெரியபுராணம் 2 காண்டம் 13 சருக்கம் 4286 பாடல்கள் கொண்டது
- காண்டங்களின் பெயர் அறிய முடியவில்லை
- முதல் சருக்கம் திருமலைச்சருக்கம்
  இறுதிச் சருக்கம் வெள்ளானைச் சருக்கம்
- 63 நாயன்மார்களையும் 9 தொகை அடியார்களையும் கூறும் நூல்
- 63 நாயன்மார்களில் மூவர் பெண்கள்.
  1. காரைக்கால் அம்மையார், 2. இசைஞானியார், 3. மங்கையர்க்கரசியார்
- தொகை அடியார் ஒன்பது பேர்
  1. தில்லைவாழ் அந்தணர்
  2. பொய் அடிமை இல்லாத புலவர்
  3. பத்தராய்ப் பணிவார்
  4. பரமனையே பாடுவார்
  5. சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்
  6. திருவாரூர்ப் பிறந்தார்
  7. முப்போதும் திருமேனி தீண்டுவார்
  8. முழுநீறு பூசிய முனிவர்
  9. அப்பாலும் அடிச்சார்ந்தார்.
- 'உலகெலாம்' என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பட்ட நூல் பெரியபுராணம்
- நூலின் முதல், இடை, கடை என்ற மூன்றிடத்தும் உலகெலாம் என்ற சொல் வருகிறது
- அருணகிரிக்கு முருகன் 'முத்தைத்தரு' என்று அடியெடுத்துக்கொடுத்தார்
- காசிப் புலவருக்கு [illegible] 'பகரும்' என்று அடியெடுத்துக்கொடுத்தல்
- [illegible] இல்லாமல் தமிழ் நாட்டுக்கு உரியதாகவே இடைக் காலத்தில் எழுந்த காப்பியம் பெரியபுராணம்

- இடைக் காலத்து இலக்கியத்துள் நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பற்றி அறிவிக்கும் பெரிய நூலாகத் திகழ்வது பெரிய புராணம்
- தமிழின் முதல் களஆய்வுநூல் பெரியபுராணம்
- தமிழ் இலக்கியங்களை வடமொழிச் சூழலிலிருந்து மீட்ட நூல் பெரியபுராணம்
- பெரியபுராணம் வடமொழியில் சிவபக்தவிலாசம், உபமன்யுவிலாசம் என்ற பெயர்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**...மேற்கோள்**

**"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"**

**"ஆட்சியில் ஆவணத்தில் அன்று மற்று அயலார் தங்கள்**
**காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்"**

**"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்**
**உன்னை என்றும் மறவாமை வேண்டும்"**

- காரைக்கால் அம்மையார் வேண்டுவதாகச் சேக்கிழார் பாடியது

**...றப்புகள்**

"பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ"- ...மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

சேக்கிழாருக்குப் புராணம் (சேக்கிழார் புராணம்) பாடியவர் உமாபதி சிவாச்சாரியார்

பெரியபுராணம் தமிழின் இரண்டாவது தேசிய காப்பியம். முதல் தேசிய காப்பியம் சிலப்பதிகாரம்

அடியவர்களைப் பன்மையில் கூறும் முதல் நூல் பெரியபுராணம்

காப்பியமா இல்லையா என்ற வாதத்திற்கு உள்ளான நூல் பெரிய புராணம்.

## சில நாயன்மார்களின் வரலாறு

- திருநாவுக்கரசரை வழிபட்டவர் அப்பூதியடிகள்
- சுந்தரரை வழிபட்டவர்கள்
சோமாசி மாற நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார்
- திருஞானசம்பந்தரை வழிபட்டவர் கணநாத நாயனார்
- நீரால் விளக்கு எரித்தவர் கணம்புல்ல நாயனார்
- புல் நெய்யால் விளக்கு எரித்தவர் கணம்புல்ல நாயனார் (தலைமயிர் எரித்தவர்)
- தம் ரத்தத்தால் விளக்கு எரிக்க முயன்றவர் கலிய நாயனார்
- ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் வாசித்தபடி மேல் உலகு சென்றவர் ஆனாய நாயனார்
- வீட்டுக் கூரையைப் பிரித்து எரித்து, வயலில் விதைக்கப்பட்ட விதைநெல்லால் உணவு ஆக்கி அடியவர்க்குக் கொடுத்தவர் இளையான்குடி நாயனார்
- சிவனைத் தூது அனுப்பிய சுந்தரரை இகழ்ந்து பின் நட்புக் கொண்டவர் ஏயர்கோன் கலிக்காம நாயனார்
- ஞானசம்பந்தரைப் பாண்டிய நாட்டுக்கு அழைத்தவர் குலச்சிறை நாயனார்
- முற்பிறவியில் சிலந்தியாக இருந்து இப்பிறவியில் 70 கோயில்களைக் கட்டியவர் கோச்செங்கண் சோழ நாயனார்
- கல்லால் அடித்துச் சிவனை வழிபட்டவர் சாக்கிய நாயனார்
- மனத்தில்கோயில் கட்டியவர் பூசலார் நாயனார்
- மனத்தால் ஞானபூசை செய்தவர் வாயிலார் நாயனார்
- முழங்கையால் சந்தனம் அரைத்தவர் மூர்த்திநாயனார்
- வஞ்சித்துத் தன்னைக் கொன்ற அடியவரைக் காத்தவர் மெய்ப்பொருள் நாயனார்
- பகைவன் நெற்றியில் திருநீறு கண்டு போரிடாமல் அவன் தன்னைக் கொல்லும்படி நடந்து கொண்டவர் ஏனாதி நாயனார்
- அறுபட்ட பகைவன் தலையில் சிவச்சின்னமான சடைமுடி கண்டு தன் உயிர் விட்டவர் புகழ்ச் சோழ நாயனார்
- தம் கணவரைச் சைவராக்கியவர் மங்கையர்க்கரசியார்

- திருநாளைப் போவார் எனப்படுவார் நந்தனார்
- கழறிற்றறிவார் எனப்படுவார் சேரமான் பெருமாள் நாயனார்
- மானியார் எனப்படுவார் மங்கையர்க்கரசியார்
- சிவநிவேதனப் பொருளைக் கீழே சிந்தியதற்காகத் தம் கழுத்தைத் தாமே அரிந்தவர் அரிவட்ட நாயனார்
- சிவனடியார்க்குத் தம் மனைவியைத் தானமாகக் கொடுத்தவர் இயற்பகை நாயனார்
- வேலையாள் சிவனடியாராக வந்தபோது அவரை வணங்காத தம் மனைவியை வெட்டியவர் கலிக்கம்ப நாயனார்
- அர்ச்சனைக்கான பூவை மோந்த மனைவியின் மூக்கைச் சிவனடியார் அறுக்க அதுபோதாது என்று கையையும் வெட்டியவர் கழற்சிங்க நாயனார்
- மனைவியைத் தீண்டாது வாழ்ந்தவர் திருநீலகண்ட நாயனார்
- மனைவியின் தாலியை விற்றுக் குங்குமம் வாங்கியவர் குங்குலியக் கலய நாயனார்
- பாற்குடத்தை இடறிய தம் தந்தையின் காலை வெட்டியவர் சண்டேசுவர நாயனார்
- பிள்ளைக்கறி சமைத்தவர் சிறுத்தொண்டர் நாயனார்
- திருமண நாளன்று மண மகளாக இருந்த தம் மகளின் கூந்தலை அரிந்து அடியவர்க்குக் கொடுத்தவர் மானக்கஞ்சார நாயனார்
- சிவனை இகழ்ந்தவரின் நாக்கை அறுத்தவர் சக்தி நாயனார்
- சிவனடியாரின் பூக்கூடையைச் சிதைத்த பட்டத்து யானையை வெட்டியவர் எறிபத்த நாயனார்
- சமணசமயத்தில் 24 தீர்த்தங்கரர்களைப் (அடியவர்களை) பற்றிப் பாடும் நூல் மகாபுராணம்

# கம்பராமாயணம்:-



**கம்பராமாயணம்**

- இராமாயணம், இதிகாசம் இரண்டனுள் முதலாவது.
- கம்பராமாயணம் ஒரு வழி நூல்
- வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணம் முதல் நூல்
- கம்பராமாயணம் வால்மீகி இராமாயணத்தின் மொழிபெயர்ப்பு அன்று தழுவல்
- இயற்றியவர் கம்பர்
- காலம் 9 ஆம் நூற்றாண்டு (அ) 10 ஆம் நூற்றாண்டு என்பர்
- பிறந்த ஊர் சோழநாட்டுத் திருவழுந்தூர் (தேரெழுந்தூர்), தந்தை ஆதித்தனார்
- கம்பர் இறந்த ஊர் பாண்டி நாட்டு நாட்டரசன்கோட்டை
- கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல்
- கம்பர் 1000 பாடலுக்கு ஒருமுறை சடையப்ப வள்ளலைப் பாடியுள்ளார்
- கம்பர் தம் நூலுக்கு வைத்த பெயர் இராமாவதாரம்
- கம்பராமாயணம் நூல் அமைப்பு:
  காண்டம் – 6, படலம் 113, பாடல்கள் 10569
- 1. பாலகாண்டம் 2. அயோத்தியா காண்டம்
  3. ஆரண்ய காண்டம் 4. கிஷ்கிந்தா காண்டம்
  5. சுந்தர காண்டம் 6. யுத்தகாண்டம்
- முதற்படலம் ஆற்றுப்படலம்
  இறுதிப்படலம் விடை கொடுத்த படலம்
- தமிழின் மிகப் பெரிய நூல் கம்பராமாயணம்
- காப்பியத்தின் உச்சகட்ட வளர்ச்சி கம்பராமாயணம்
- திருமாலின் அவதாரம் இராமன்
- இராமனின் குலம் சூரிய குலம்
- தந்தை தசரதன், தாய் கோசலை (கௌசல்யா)
- வளர்ப்புத்தாய் கைகேயி
- நாடு கோசலம்
- நகரம் அயோத்தி
- ஆசிரியர் வசிட்டர்
- கைகேயியின் தோழி கூனி

- கூனியின் இயற்பெயர் மந்தரை
- கைகேயியின் மனத்தை மாற்றியவள் கூனி
- இராமனின் தம்பியர் மூவர்:
  1. பரதன் 2. இலக்குவன் 3. சத்துருக்கனன்
- இராமனால் தம்பியராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் மூவர்
  1. குகன் 2. சுக்ரீவன் 3. வீடணன்
- இராமன் முதன் முதலாகக் கொன்றது தாடகை என்ற பெண்ணை.
- விசுவாமித்திரரின் யாகத்தைக் காக்கும் பொருட்டு இராமன் தாடகையைக் கொன்றான்
- இராமனை மிதிலைக்கு அழைத்துச் சென்றவர் விசுவாமித்திரர்
- இராமன் – சீதை திருமணம் நடந்த இடம் மிதிலை
- சீதையின் தந்தை ஜனகன்
- சீதைக்கு ஜானகி, மைதிலி என்ற வேறுபெயர்களும் உண்டு
- பரதன் மனைவி மாண்டவி (ஜனகன் மகள்)
- இலக்குவன் மனைவி ஊர்மிளா (ஜனகன் மகள்)
- சத்ருக்னன் மனைவி சதகீர்த்தி (ஜனகன் மகள்)
- இராவணன் மனைவி மண்டோதரி
- கும்பகருணன் மனைவி வச்சிரசுவாலை, தீர்க்க சுவாலை
- வீடணன் மனைவி சுரமை
- கைகேயியின் மகன் பரதன்
- சுமத்திரையின் மக்கள் இலக்குவன், சத்ருக்கனன்
- ஆதிசேடனின் அவதாரம் இலக்குவன்
- திருமணம் முடிந்து அயோத்தி வரும் வழியில் இராமனை எதிர்த்தவர் பரசுராமர்
- கங்கைக் கரையைக் கடக்க இராமனுக்கு உதவியவன் குகன்
- குகனின் தலைநகரம் சிருங்கிபேரம்
- கிஷ்கிந்தையை ஆண்டவன் வாலி
- வாலி மனைவி தாரை
- வாலி மகன் அங்கதன்
- வாலி தம்பி சுக்ரீவன்
- வாலியைக் கொன்றவன் இராமன்

- சுக்ரீவன் அமைச்சன் அனுமான்
- இராமனுக்காகச் சீதையிடம் தூது சென்றவன் அனுமான்
- இராமனுக்காக இராவணனிடம் தூது சென்றவன் அங்கதன்
- அங்கதன் தூது வால்மீகி இராமாயணத்தில் இல்லை
- இரண்யன்வதம் வால்மீகி இராமாயணத்தில் இல்லை
- வீடணன் மகள் திரிசடை
- இராவணன் மகன் இந்திரஜித்
- இந்திரஜித்தின் இயற்பெயர் மேகநாதன்
- இந்திரஜித்தின் அம்பால் மயங்கி விழுந்தவன் இலக்குவன்
- இந்திரஜித்தைக் கொன்றவன் இலக்குவன்
- 14 ஆண்டுகள் தூங்காமல் இருந்து இந்திரஜித்தை இலக்குவன் கொன்றான்
- தேவ – அசுரப்போர் 18 வருடம் நடந்தது
  இராமாயணப் போர் 18 மாதம் நடந்தது
  மகாபாரதப் போர் 18 நாள் நடந்தது;
  செங்குட்டுவனின் வடநாட்டுப் போர் 18 நாழிகை நடந்தது
- இராமன் முடிசூட்டிக் கொண்டபோது
  அரியணை தாங்கியவன் அனுமான்
  உடைவாள் ஏந்தியவன் அங்கதன்
  வெண்கொற்றைக் குடை பிடித்தவன் பரதன்
  கவரி வீசியவர்கள் இலக்குவன், சத்துருக்கனன்
  முடி (கிரீடம்) எடுத்துக் கொடுத்தவர் சடையப்ப வள்ளலின் முன்னோர்
  முடிசூட்டியவன் வசிட்டன்
- கம்பர் தம் ராமாயணத்தை அரங்கேற்றிய இடம் திருவரங்கம்

மேற்கோள்

"இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்"
"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"
"வீரமும் களத்தே போட்டு வெறும் கையோடு இலங்கை புக்கான்"
"இன்று போய் நாளைவா"
"வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

"பேசுவது மானம் இடைப்பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம் கொற்றம்"
"இற்பிறப்பு என்பெதான்றும் இரும்பொறை
என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"
"கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்"
"தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க"
"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்"
"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை மாதோ"
"உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்"
"கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற்றன்றே"
"கை வண்ணம் அங்குக் கண்டேன்
கால்வண்ணம் இங்குக் கண்டேன்"
"ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ"
"அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா"
"விருந்துவரின் என்னுறுமோ என்று விம்மும்"

- கம்பர் எழுதிய பிற நூல்கள்
  ஏர் எழுபது, திருக்கை வழக்கம் (இரண்டும் உழவு பற்றியது)
  சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி.
- கம்பர் மகன் அம்பிகாபதி
- அம்பிகாபதி எழுதியது அம்பிகாபதிக்கோவை
- இராம நாடகக் கீர்த்தனை எழுதியவர் அருணாசலக் கவிராயர்

# காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை :

தமிழ் தொன்மைச் சிறப்பும், இலக்கிய வளமும், இனிமைப் பண்பும் வாய்ந்த மொழி. தமிழிலக்கிய வரலாற்றில் கோலோச்சிக் கொண்டிருந்தவை "காப்பியங்கள்" என்று கூறலாம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சிறந்த காப்பியங்கள் தமிழில் தோன்றின.

தமிழில் காப்பிய இலக்கியம் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டுள்ளது. தொல்காப்பியத்திற்கு முன்பே பல வாய்மொழி வடிவக் காப்பியங்களும் வரிவடிவப் பெருங்காப்பியங்களும் தோன்றி உயர்ந்திருக்க வேண்டும்.

"தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்று 'தொன்மை' பற்றி தொல்காப்பியர் கூறுவது, தொன்று தொட்டு வழங்கும் பழங்கதை தழுவிய காப்பியங்களையும், கதை தழுவிய நூல்களையுமே சுட்டுகிறது.

காப்பியம் - விளக்கம்

ஒரு கதையை நீண்ட செய்யுள் வடிவில் கூறுவதைக் காப்பியமாகக் கருதுவர். 'காவ்ய' என்ற வடமொழிச் சொல் காப்பியமாகத் தமிழில் வழங்கப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் 'எபிக்' [Epic] என்ற சொல் காப்பியத்தைக் குறிக்கும்.

தன்னிகரில்லாத தலைவன் ஒருவனின் அரிய பெரிய செயல்களையும், அவன் இருந்ததையும் அவன் நாடு, நகர், ஆறு போன்றவற்றையும் அகப்படுவது பெருங்காப்பியப் பண்பாகும். காப்பியம் என்ற சொல் பழங்காலத்தில் பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்று வழங்கப்பட்டது.

**காப்பியங்களின் சிறப்பியல்புகள் :**

* காப்பியம் கதை நிகழ்ச்சிகளால், பல்வேறு கிளைகளால் நீண்டது ; பெரியது.
* சங்க காலத்தில் தனிப்பாடல்களாகப் பாடப்பட்ட கதைகள் நாளடைவில் செய்யுள் வடிவில் காப்பியமாக வளர்ந்தது.
* இந்திய இலக்கியங்களில் இதிகாசமாக வடமொழியில் காப்பிய வகை தொன்மையான இலக்கிய வடிவங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.
* காப்பியத்திற்கென இலக்கண வரையறையும் அம்மொழியில் உண்டு.
* தமிழில் காப்பிய இலக்கணத்தைக் கூறும் நூல் எதுவும் தொடக்க காலத்தில் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.
* வடமொழியைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட தண்டியலங்காரத்தில் தான் முதன் முதலாகக் காப்பியத் - திற்கான இலக்கணத்தைக் காண முடிகின்றது.
* காப்பியத்திற்குரிய பொது இலக்கணமும், காப்பிய வகைகளும் அதில் கூறப்பட்டுள்ளது.

**காப்பிய இலக்கணம் :**

* வாழ்த்து, வணக்கம் வருபொருள் கூறப்பெறுதல்.
* அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயன் உரைத்தல்
* தன்னிகரில்லாத் தலைவனை உடையதாக அமைதல்
* இயற்கைப் புனைவுகள் இடம் பெறுதல் [மலை, கடல், நாடு, நகர் முதலியன]
* நன் மணம் புரிதல், பொன் முடி கவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், புதல்வரைப் பெறுதல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறுதல்.

* மந்திரம், தூது, செலவு, இகல், வெற்றி ஆகியன பெற்றிருத்தல்
* சருக்கம், இலம்பகம் இவற்றில் ஒன்றினைப் பிரிவாகக் கொண்டிருக்கும்.
* நெருங்கிய சுவையும் பாவமும் பெற்றிருத்தல்
* கற்றோர் புனையும் பெற்றியாதல்.

எனத் தண்டியலங்காரம் காப்பிய இயல்பினைக் குறிப்பிடுகிறது.

**காப்பிய வகை :**

காப்பிய வகைகளை இருவகையாகக் காண்கிறார் தண்டி. நாற்பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு இவற்றில் ஒன்று குறையினும் அவை சிறுகாப்பியம் என்றும், நான்கும் அமைவதனைப் பெருங்காப்பியம் என்றும் பகுத்துக் கூறுகிறார்.

* பெருங்காப்பியம்
* சிறுகாப்பியம்.

தமிழில் காணலாகும் காப்பியங்களை (அ) ஐம்பெருங்காப்பியங்கள் (ஆ) ஐஞ்சிறு காப்பியங்கள் (இ) பிற காப்பியங்களும் புராணங்களும் என்ற மூன்று நிலைகளில் வகைப்படுத்திக் காணலாம்.

**ஐம்பெருங்காப்பியங்கள் :**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை.
3. சீவக சிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி.

**ஐஞ்சிறு காப்பியங்கள் :**

1. நீலகேசி.
2. சூளாமணி
3. உதயண குமார காவியம்
4. யசோதர காவியம்
5. நாககுமார காவியம்

## பிற காப்பியங்களும் புராணங்களும் :

1. பெருங்கதை
2. பெரியபுராணம்
3. கம்பராமாயணம்
4. கந்தபுராணம்
5. நளவெண்பா
6. வில்லிபாரதம்
7. அரிச்சந்திர புராணம்
8. நைடதம்
9. திருவிளையாடற் புராணம்
10. தேம்பாவணி
11. இரட்சண்ய யாத்ரிகம்
12. சீறாப்புராணம்

## முடிவுரை :

இக்காப்பியங்கள் சோழர் தம் ஆட்சிக் காலத்தில் சிறந்து விளங்கின ; அவர்க்குப் பின்பு பெருங்காப்பியங்கள் தோன்றும் சூழ்நிலை உருவாகவில்லை. ஏறக்குறைய நான்காயிரம் பாடல்களைக் கொண்ட வில்லிபுத்தூராரின் பாரதம் கி.பி.14-ம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது. வடமொழி வழிவந்த இக்காப்பியத்தைக் காட்டிலும் சிறந்த காப்பியம் இதற்குப் பின்னர்த் தோன்றவில்லை. இந்நூலே தமிழர் காப்பிய நெறியின் இறுதிக் கட்டமாக அமைந்தது எனலாம்.

# நாடகம்

## 16. நாடக இலக்கியத் தகவல்கள்

- நாடக வழக்கு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது
- 'வாடா வயவர் ஏத்தும் வள்ளி'– இதில் வள்ளி என்பது கூ… என்கிறார் இளம்பூரணர்
- நாடகக் காப்பியமாகப் போற்றப்படுவது சிலப்பதிகாரம்
- நாடக அமைப்பு, திரைச்சீலை, விளக்கு போன்றன குறித்… கூறும் நூல் சிலப்பதிகாரம்
- சிலப்பதிகார உரையாசிரியர், மறைந்து போன நாடக நூல்… குறித்துக் கூறுகின்றார். (காண்க: உரையாசிரியர்கள் அடியார்க்கு நல்லார்)
- இராஜராஜனின் வெற்றியைச் சிறப்பிக்கும் நாடகம்: ராஜராஜேஸ்வர விஜயம்.
- வைகாசி மாத விழாவில் இந்நாடகம் நடிக்கப்பட்டது
- இந்நாடகத்தை நடத்திய ஆசிரியர் விஜயராஜேந்திரன்
- குலோத்துங்க சோழ நாடகமும் சோழர்காலத்தது
- சோழர்காலத்தில் புகழ்பெற்ற நாடகத்துள் ஒன்று பூம்புலி… நாடகம்
- பூம்புலியூர் நாடகத்தின் ஆசிரியர் கமலாலயப்பட்டர். தமி… இன்று ஆசிரியர் பெயர் தெரிந்த முதல் நாடகம் இதுவே ஆகு…
- சோழர்காலத்து நாடகம் குறித்துக் கூறும் கல்வெட்டுகள்
  - தஞ்சை பிரகதீசுவரர் கோயில் கல்வெட்டு
  - திருக்கழுக்குன்றக் கோயில் கல்வெட்டு
  - திருவல்லீசுவரக் கோயில் கல்வெட்டு
  - பட்டமடைக்கோயில் கல்வெட்டு
- பெண் நாடகக்குழுவிற்கு உய்யவந்தாள் என்பவள் தலைவியா… இருந்தாள் என்ற செய்தியைக் கூறும் கல்வெட்டு பட்டமடை… கோயில் கல்வெட்டு

நாடகத்தன்மை வாய்ந்த சிற்றிலக்கிய வகைகள்: குறவஞ்சி பள்ளு

- குறவஞ்சி என்பது காதல்பற்றிய நூல்
- பள்ளு என்பது உழவர்களைப் பற்றிய நூல்
- 'முக்கூடற் பள்ளு' என்ற நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- 'முக்கூடற் பள்ளு நாடகம்' என்ற நூலின் ஆசிரியர் என்னயினாப் புலவர்
- தொடக்க கால நாடகங்கள் விலாசம் என்ற பெயரில் வந்தன
- காசிவிசுவநாத முதலியார் – டம்பாச்சாரி விலாசம்

  திண்டிவனம் ராமசாமி ராஜா – பிரதாப சரித்திர விலாசம்

  அப்பாவுப் பிள்ளை – சித்திராங்கி விலாசம், அரிச்சந்திர விலாசம்,

  இராமச்சந்திர கவிராயர்– சகுந்தலைவிலாசம், தாருக விலாசம், பாரதவிலாசம்

  பரசுராமக்கவிராயர் – திருத்தொண்டர் விலாசம்.
- மேடையில் நடிக்கப்பட்ட முதல் சமூக நாடகம் டம்பாச்சாரி விலாசம்
- முழுவதும் வசனத்தில் வந்த முதல் நாடகம் பிரதாப சரித்திர விலாசம்
- இந்துஸ்தானி மெட்டுகள் நுழைந்த முதல் நாடகம் சித்திராங்கி விலாசம்

## சங்கரதாஸ் சுவாமிகள்

- வாழ்க்கை 1867 முதல் 1922 வரை
- திருமணம் இன்றித் துறவு வாழ்க்கை மேற்கொண்டவர்
- நாடகத்தில் கீர்த்தனைப்பாடல்களை மிகுதியாகப் பயன்படுத்தியவர்.
- சமரச சன்மார்க்க நாடகசபை, பாய்ஸ் கம்பெனி என்ற நாடக குழுக்களை நிறுவியவர்
- 'ஞானப்பழத்தைப் பிழிந்து' என்ற புகழ்பெற்ற பாடலை இயற்றியவர்
- ஒரே இரவில் முழு நாடகத்தையும் எழுதி முடிக்கும் வல்லமை பெற்றவர்
- ஒரே இரவில் எழுதி முடிக்கப்பட்ட நாடகம் அபிமன்யு சுந்தரி

## இயற்றிய நாடகங்கள்

- அல்லி அர்ஜுனா, இலங்கா தகனம், கோவலன், சதி அநுசூயா, சத்தியவான் சாவித்திரி, சதிசுலோசனா, சிறுத்தொண்டர், சிந்தாமணி, சீமந்தினி, பவளக்கொடி, பிரகலாதா, பாதுகா பட்டாபிஷேகம், லவகுசா, பார்வதி கல்யாணம், நல்லதங்காள், ரோமியோ ஜுலியட், சிம்பலின் போன்ற 40 நாடகங்கள்
- இவரின் புராண நாடகங்கள் புகழ்வாய்ந்தவை
- இவர் நாடகங்கள் இவர் காலத்தில் அச்சேறவில்லை
- யாழ்ப்பாணம் சென்று நாடகம் நடத்தியவர்
- யாழ்ப்பாண நாடகக் குழுவுக்கு ஆசிரியராக இருந்தவர்
- நடிகர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டை வலியுறுத்தியவர்
- தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றப்படுபவர்

## பெ.சுந்தரம்பிள்ளை

- வாழ்க்கை: 1855 முதல் 1897 வரை
- தத்துவப் பேராசிரியர்
- இவரின் ஞானாசிரியர் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் என்.
- ராவ் பகதூர் பட்டம் பெற்றவர்
- மனோன்மணீயம் என்ற கவிதை நாடகத்தை எழுதியவர்
- ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு எழுதிய (The secret w... இரகசியவழி என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட மனோன்மணீயம்.
- மனோன்மணீயம் ஆசிரியப்பாவால் ஆனது
- தமிழில் இலக்கியத் தரம் வாய்ந்த நாடகம் இல்லாத குறையை போக்கியது மனோன்மணீயம்.
- 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்து இடம் பெற்ற நூல் மனோன்மணீயம்
- தமிழ்த்தாய் வாழ்த்து பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என் பாவில் இயற்றப்பட்டுள்ளது
- தமிழ்தாய் வாழ்த்திற்கு இசை அமைத்தவர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விசுவநாதன்

- தமிழைத் தெய்வமாகப் போற்றிய நூல்
- தமிழ்த்தாய்க்குக் கோயில் உள்ள ஊர் காரைக்குடி
- ஜீவகன், மனோன்மணி, குடிலன், புருசோத்தமன், வாணி, நடராசன், சுந்தர முனிவர், கருணாகரர் நிஷ்டாபரர் போன்ற பாத்திரங்கள் இடம்பெறும் நூல்
- பாண்டிய மன்னன் ஜீவகன்
- ஜீவகனின் குரு சுந்தர முனிவர்
- ஜீவகனின் அமைச்சன் குடிலன்
- மனோன்மணியை மணந்தவன் சேரமன்னன் புருஷோத்தமன்
- மனோன்மணியின் தோழி வாணி
- வாணியின் காதலன் நடராசன்
- சுந்தரமுனிவரின் சீடர்கள் கருணாகரர், நிஷ்டாபரர்
- சிவகாமி சரிதம் என்ற கிளைக்கதை இடம் பெற்ற நூல் மனோன்மணீயம்
- நாடகத்துள் நாடகமாகத் திகழ்வது சிவகாமி சரிதம்
- தத்துவப் பொருள் கொண்டது சிவகாமி சரிதம்
- 'சிவகாமி சபதம்' என்பது கல்கி எழுதிய வரலாற்று நாவல்

## பிற நூல்கள்

- திருஞான சம்பந்தர் கால நிர்ணயம்
- நூற்றொகை விளக்கம்
- சேரநாட்டுப் பழங்கால அரசர்கள்
- ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை: திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி

## பரிதிமாற்கலைஞர்

- இயற்பெயர் சூரிய நாராயண சாஸ்திரி
- வாழ்க்கை *1870 – 1903*
- சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்

- தனித்தமிழ்ப் பற்றாளர்
- நாடகத்திற்கு இலக்கணம் எழுதியவர்
- இவர் எழுதிய நாடக இலக்கண நூல் நாடகவியல்
- நாடகவியல் நான்கு பகுதிகளைக் கொண்டது
  1. பொதுத்தன்மை 2. அமைப்பு 3. வகை 4. நடிப்பு
- நாடகவியல் வெளிவந்த ஆண்டு 1897
- இயற்றிய நாடகங்கள் ரூபாவதி, கலாவதி, மானவி சூர்ப்பநகை
- ரூபாவதி அறக்கருத்து நிறைந்தது
  கலாவாதி – நாடகவியலுக்கு இலக்கியமாகத் திகழ்வது
  மானவிஜயம் – களவழி நாற்பது என்ற நூலைப் பின்ப கணைக்கால் இரும்பொறையின் வரலாற்றைக் கூறுவது
- சூர்ப்பநகை – புராண நாடகம்
- பிறநூல்: தமிழ்ப் புலவர் சரித்திரம்

## பம்மல் சம்பந்த முதலியார்

- முழுப்பெயர் திருஞான சம்பந்தம்
- வாழ்க்கை 1873 – 1919
- மாநிலக் கல்லூரி மாணவர்
- நீதிபதியாகப் பணியாற்றியவர்
- நிறுவிய நாடகமன்றம் சுகுண விலாச சபை
- முதல் நாடகம் புஷ்பவல்லி

## இயற்றிய நாடகங்கள்

- பிறமொழித் தழுவல் – காளிதாசனின் சகுந்தலை, மா விகாக்கனி மித்திரம்; ஹர்ஷவர்த்தனர் இயற்றிய இரத்தினாவ சேக்ஸ்பியரின் அமலாதித்தன், மகபதி, விரும்பிய விதமே.
  புராண நாடகங்கள்: சதிசுலோசனா, காலவரிஷி, யயாதி
  எள்ளல் நாடகங்கள்: சபாபதி, ஏமாந்த இருதிருடர்கள், சதிசக் வைகுண்ட வாத்தியார்
  சமூக நாடகங்கள்: பொன்விலங்குகள், விஜயரங்கம், கலையே காதலோ

நாட்டுப்பற்று நாடகங்கள்: இந்தியனும் ஹிட்லரும், இராஜபுத்தர வீரன், தீயின் சிறுதிவலை.

இன்பியல் நாடகங்கள்: காதலர் கண்கள், சூறமகள், தாசிப்பெண், மனோகரா

துன்பியல் நாடகங்கள்: உண்மையான சகோதரன், இரு நண்பர்கள், கள்வர் தலைவன்

- இயற்றிய நாடகங்கள் அனைத்தையும் தம் பெற்றோருக்கே படைத்துள்ளார்
- துன்பியல் நாடகத்திற்கு வழிகோலியவர்
- தமிழில் வெளிவந்த முதல் உரை நடை நாடகம் சதிசுலோசனா
- சேக்ஸ்பியரின் நாடகங்களை மிகுதியாகத் தமிழில் மொழிபெயர்த்தவர்.
- நாடக நடிகர்களுக்கு இருந்த கூத்தாடிகள் என்ற இழிபெயரை மாற்றிக் கலைஞர்கள் என மதிக்கும்படி செய்தவர்
- இவர் நாடகத்தில் நடித்த அக்காலச் சமுதாயப் பெரியோர்கள்: சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர்.சிபி ராமசாமி ஐயர், எஸ். சத்திய மூர்த்தி, உயர்நீதி மன்ற நீதிபதி வி.சி. சினிவாச ஐயங்கார், டாக்டர் பி. ராமமூர்த்தி
- இயற்றிய நாடகத் தொடர்பான நூல்கள்: நாடகமேடை நினைவுகள், நான் கண்ட நாடகக் கலைஞர்கள், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? நாடகத்தமிழ், நடிப்புக்கலை

## பெற்ற பட்டங்கள்

- தமிழ் நாடகத் தந்தை

  தமிழ் நாடகப் பேராசிரியர் – நாடக உலகம் தந்தவை

  ராவ்பகதூர் – ஆங்கில அரசு தந்தது

  பத்மபூஷன் – இந்திய அரசு தந்தது
- "தத்தளித்து நின்ற தமிழ் நாடகத் தாய்க்குப் புத்துயிர் அளித்த புண்ணியவான்" என்று இவரைப் புகழ்ந்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

**அறிஞர் அண்ணா**

- சந்திரோதயம் – முதல் நாடகம்; பிரச்சார நாடகம்
- ஓர் இரவு – ஒரே இரவில் நடந்தவற்றைக் கூறும் நாடகம்
- வேலைக்காரி – ஏற்றத்தாழ்வை நீக்க முயலும் நாடகம்
- நீதிதேவன் மயக்கம் – இராவணன் குற்றமற்றவன் எனக் கூறும் நாடகம்
- நல்லதம்பி – நகைச்சுவை நாடகம்
- சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம் – வரலாற்று நாடகம்
- பிற: சந்திரமோகன், நல்லதம்பி, காதல்ஜோதி, கலிங்கராணி, கண்ணீர்த்துளி

**கலைஞர் கருணாநிதி**

- ஒரே முத்தம் – ஈழத்து கற்பனை நிகழ்ச்சி நாடகம்
- நச்சுக் கோப்பை – பெண்ணின் மணஉரிமை பேசும் நாடகம்
- உதய சூரியன், காகிதப்பூ – பிரச்சார நாடகங்கள்
- மணிமகுடம் – வரலாற்று நாடகம்
- மந்திரிகுமாரி – இலக்கியத்தை நாடகமாக்கியது
- பிற: பராசக்தி, தூக்குமேடை, மனோகரா, பூம்புகார்
- வீரம் நிறைந்த வசனம், வளம் மிகுந்த வசனம் எதுகை மோனை தொடை, இலக்கிய நடை கொண்டது இவர்தம் வசனம்.

**ஆர்.எஸ். மனோகரன்** – சாணக்கிய சபதம், லங்கேஸ்வரன்

**திருவாரூர் தங்கராசு** – ரத்தக் கண்ணீர்

**கே.பாலசந்தர்**

- நீர்க்குமிழி, மெழுகுவர்த்தி, எதிர்நீச்சல், நாணல், மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம், ஜன்னல்கள், சதுரங்கம்

**பாரதிதாசன்**

- இரணியன் அல்லது இணையற்ற வீரன், சௌமியன், கற்கண்டு, படிக்காத பெண்கள், கழைக்கூத்தாடியின் காதல், சேரதாண்டவம், பிசிராந்தையார்

**பி.எஸ்.ராமையா**

- தேரோட்டி மகன், போலிஸ்காரன் மகள், பிரிசிடெண்ட் பஞ்சாச்சரம், கைவிளக்கு, மல்லியம் மங்களம்

**அரு.ராமநாதன்** – ராஜராஜசோழன், வீரபாண்டியன் மனைவி

**கோமல் சுவாமிநாதன்**

- புதிய பாதை (முதல் நாடகம்), தண்ணீர் தண்ணீர், ஒரு இந்தியக் கனவு, பாலூட்டி வளர்த்த கிளி, குமார விஜயம், பெருமாளே சாட்சி

**சக்தி கிருஷ்ணசாமி** – வீரபாண்டிய கட்டபொம்மன்

**தமிழ்வாணன்** – புலித்தேவன்

**சோ**

- சம்பவாமி யுகே யுகே, முகமது பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை, வாய்மையே வெல்லும், நேர்மை உறங்கும் நேரம், ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு, ஜனதா நகர் காலனி, சரஸ்வதியின் செல்வன், மனம் ஒரு குரங்கு

**ஏ.என்.நல்லபெருமாள்**

- பீலிவளை, மானனீகை
- நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
- தமிழ் நாடகம்– ஓர் ஆய்வு
- உலக அரங்கில் நாடகம்

**பிற நாடக ஆசிரியர்கள்**

- பவானந்தம்பிள்ளை–அரிச்சந்திரன், பாதுகா பட்டாபிஷேகம்
- தெ.பொ. கிருஷ்ணசாமி – கதரின் வெற்றி, பம்பாய்மெயில், தேசியக்கொடி, பதிபக்தி பர்த்ருஹரி
- ரா. வெங்கடாசலம் – முதல்முழக்கம், இமயத்தில் நாம்
- எத்திராஜிலு – அவ்வையார்

- சாமிநாத சர்மா – பாணபுரத்து வீரன்
- டி.கே. முத்துசாமி – குமஸ்தாவின் பெண், கவிகாளமே... வித்யாசாகர்
- எஸ்.டி. சுந்தரம் – கவியின் கனவு
- தேவன் – கோமதியின் காதலன், மைதிலி, துப்பறியும் சாம்...
- கு.சா. கிருஷ்ணமூர்த்தி – அந்தமான் கைதி
- நாரண துரைக் கண்ணன் – உயிரோவியம்
- கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் – கிந்தனார், சந்திரண...

## கவிதை நாடகங்கள்

- மனோன்மணீயம் –பெ.சுந்தரம் பிள்ளை
  மானவிஜயம் – பரிதிமாற் கலைஞர்
  சத்திமுத்துப் புலவர் – பாரதிதாசன்
  காமஞ்சரி – புலவர் குழந்தை
  அனிச்சஅடி – புலவர் பழனி
  பொன்னி – குமார வேல்
  மூன்றாம்பிறை – புவியரசு
  நீர்மாங்கனி – மலையமான்

## ஓரங்க நாடகங்கள்

- சாக்ரடீஸ், சேரன் செங்குட்டுவன் – கலைஞர் கருணாநிதி
  உதயகன்னி, நிகும்பலை – சீனிவாசராகவன்
  கௌரவ மாப்பிள்ளை – பூர்ணம் விசுவநாதன்
  சொல்லின் செல்வன் – ரா.சீனிவாசன்
  காதல் எங்கே – மு. வரதராசனார்
  வஞ்சமகள் – அழகிரிசாமி
  நடை ஓவியம் – ஜெகசிற்பியன்
  மகுடி – பூவை எஸ். ஆறுமுகம்
- நாடகத்திலகம் – ஆர்.எஸ்.மனோகரன் (இயற்பெயர் லட்சு... நாராயணன்)
- நடிகர் திலகம் – சிவாஜி கணேசன்

- வடமொழியில் உள்ள சாகுந்தலத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் – லட்சுமியம்மாள், மறைமலையடிகள் ரா. ராகவையங்கார், பவானந்தம் பிள்ளை
- பல புதினங்களை நாடகமாக மாற்றியவர் கந்தசாமி முதலியார்
- தற்போது கிரேஸிமோகன், மெரினா, மௌலி, எஸ்.வி.சேகர் போன்றோர் நாடகத்திற்கு வளமூட்டி வருகின்றனர்.

வினாக்கள்:

1. ஐம்பெருங்காப்பியங்கள் பற்றி எழுதுக.
2. ஐஞ்சிறுகாப்பியங்கள் பற்றி எழுதுக.
3. பெரியபுராணம் பற்றி விரிவாக எழுதுக.
4. கம்பராமாயணத்தை சுருக்கி வரைக.
5. காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி கட்டுரை வரைக.
6. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி கட்டுரை வரைக.